1973 ஆகஸ்ட் 14]

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: அப்படி ஒன்றும் குறிப்பு இல்லை.

திரு. கோவை செழியன்: தலைவர் அவர்களே, நம்முடைய சென்னை மாநகரத்தில் இருக்கிற மிருகக்காட்சிச்சாலையில் இருக்கிற மிருகங்களைப் பார்த்தால் பரிதாபமாக இருக்கிறது. எந்த நேரத்தில் உயிர் போய் விடுமோ என்ற நிலையில்தான் அவை இருக்கின்றன. இங்கிலாந்து நாட்டில் தன்னிச்சையாக இயங்கக்கூடிய முறையில் பெரிய காடுகளில் கார்களுக்குள்ளே அல்லது வான்களுக்குள்ளே இருந்துகொண்டு சென்று பார்க்கிற அளவில் ஒரு மிருகக் காட்சிச்சாலையை அமைத்திருக்கிறார்கள். அதேபோல் சென்னையிலும் இயங்கக்கூடிய அளவிற்கு ஒரு காட்டில் இப்படி ஒரு மிருகக்காட்சிச்சாலையை அமைத்தால் மிக நன்றாக இருக்கும். அதற்கு ஏதாவது செய்யப்படுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அதுபோன்ற திட்டம்தான் அரசுக்கு இருக்கிறது. குறிப்பாக இப்போது ஹைதராபாத்தில் இருக்கிற மிருகக்காட்சிசாலையைப் போல்—அது நண்பர் செழியன் அவர்கள் குறிப்பிட்டதுபோல்தான் அமைக்கப்பட்டிருக்கிறது—அமைக்கவேண்டுமென்றுதான் அரசு விரும்புகிறது.

திருச்சிராப்பள்ளியில் பெண்கள் பாலிடெக்னிக்

*124 வினா—திருமதி த. ந. அனந்தநாயகி: மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சிராப்பள்ளியில் பெண்களுக்கென்று ஒரு தனி பாலிடெக்னிக் ஆரம்பிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இல்லை.

திரு. கு. காமாட்சி: தலைவரவர்களே, எஸ். எஸ். எல். சி. வரையில் இப்போது 'கோ-எடுகேஷன்' முறை அனுசரிக்கப்பட்டு வருகிறது. அதே போல் பாலிடெக்னிக், ஐ. டி. ஐ. போன்றவற்றிலும் அந்த முறை அனுசரிக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இப்போது பெண்களுக்கு என்று தனி பாலிடெக்னிக்குகள் மூன்று இடங்களில் இருந்து, பெண்களுக்கு ஏற்ப, அவர்களுக்குத் தகுந்த பாடப் பகுதிகளில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது. அந்த வகையில் இப்போது ஆண்களுக்கு என்று அனுமதிக்கப்படுகிற பாலிடெக்னிக்குகளில் பெண்கள் சேர்க்கப்படுவது இல்லை. அது கொள்கை சம்பந்தமான ஒன்று.